சே.வே.எண் 65,அக்சூடார் நாள் 28.10.2016

தருமபுரி மாவட்டம்

## நல்லம்பள்ளி வட்டம், மிட்டாதின்னஅள்ளி கிராமத்தில் அம்மா திட்ட சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், மிட்டாதின்னஅள்ளி கிராமத்தில் அம்மா திட்ட சிறப்பு முகாம் இன்று (28.10.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் மருத்துவ சுகாதார பணிகள் சார்பில் நிலவேம்பு குடிநீர், கால்நடை துறை, சமூக பாதுகாப்புத் துறை, ஊரக வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளின் மூலம் அமைக்கப்பட்டிருந்து கண்காட்சியினை பார்வையிட்டும், பின்னர் புதிய குடும்ப அட்டை, ஜாதி சான்று, வருமான சான்று, பட்டா சிட்டா பெயர் மாற்றம் என பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அம்மா திட்ட முகாம் தருமபுரி மாவட்டத்தில் 470 கிராமங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வாரந்தோறும் வட்டங்கள் வாரியாக கிராமங்களைத் தேர்வு செய்து தற்போது 5-வது சுற்றில் 165 கிராமமாக மிட்டாதின்னஅள்ளி கிராமத்தில் முகாமில் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று உடனடி தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்கள், பயன்கள், பொதுமக்கள் அனைவருக்கும் சென்று சேரும் வண்ணம் ஒவ்வொரு முகாம்களிலும் பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அமைக்கப்படுகிறது. தனிநபர் கழிப்பறை அமைக்க அரசு ரூ. 12 ஆயிரம் மானியமாக வழங்குகிறது. அதனை பெற்று தனிநபர் கழிப்பறை அமைக்க முன்வர வேண்டும். தமிழகத்திலேயே கணினி மையத்தின் வாயிலாக குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை பதிவு செய்வதில் நல்லம்பள்ளி வட்டம் 2-ம் இடம் பெற்றுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கு தேவையான ஜாதி, வருமானம், இருப்பிடச்சான்றிதழ்கள் பெற அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தொடர்பு கொள்ளலாம். பொதுமக்களுக்கு ஏதேனும் விவரங்கள் அறிய வேண்டுமெனில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ் அப் எண். 8903891077 ஆகிய எண்களுக்கு தங்களது புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக இயற்கை மரண உதவித்தொகை 2 பயனாளிகளுக்கும், திருமண உதவித்தொகை 4 பயனாளிகளுக்கும், வருமானச் சான்றிதழ் 2 நபர்களுக்கும், பிறப்புச் சான்றிதழ் 1 பயனாளிக்கும், சாதி சான்றிதழ் 1 பயனாளிக்கும், நுகர்வோர் உணவுப்பொருள் வழங்கல் துறையின் சார்பில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்து 15 பயனாளிகளுக்கும் மாவட்ட ஆட்சித்

தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். முதியோர் உதவித்தொகை 25 மனுக்கள் பெறப்பட்டு நிலுவையில் உள்ளது.

இம்முகாமில் வட்டாட்சியர் திரு. ராஜசேகரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. சத்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.